DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 37/2015 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 3 |
| Name | மாதவன் |
| Father / Husband Name | வேதமாணிக்கம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 24th April 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் காரைக்குடியில் குடியிருந்து வருகின்றேன். நான் சர்வேயராக பணியாற்றி தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1 என் தம்பி மகள். விபத்தில் இறந்த நபர் அ.சா.1 ன் கணவர். கடந்த 30.12.2014 ம் தேதியன்று மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து பார்வையாளர்கள் நேரத்தில் விபத்தில் காயம்பட்ட நபரான அ.சா. 1ன் கணவரை பார்த்தேன் அவர் கோமா ஸ்டேஜில் இருந்தார். நாடித் துடிப்பு குறைவாக இருந்தது.

2) அ.சா.1ன் கணவர் காயம்பட்டு சிவகங்கை அரசு மருத்துவமனையில் இருக்கும் போதே எனக்கு தகவல் வந்தது நான் எனது

மனைவியை தனியாக விட்டு விட்டு செல்ல முடியாததால் அதன் பிறகு 30.12.2014 தான் மதுரைக்கு சென்று பார்த்தேன். அ.சா.1 ம் அவரது கணவரும் சிவகங்கைக்கு வந்துவிட்டு காளையார்கோவிலுக்கு திரும்பும் போது கார் ஒன்று வேகமாக வந்து அ.சா.1 ன் கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கேள்விப்பட்டேன்.

3) 01.01.2015 ம் தேதி காலை அ.சா.1 ன் கணவர் இறந்த விவரம் தெரிந்துகொண்டேன். உடனே நான் மருத்துவமனை சென்றேன். பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதம் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக சொந்த ஊருக்கு எடுத்து வந்து நல்லடக்கம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் எந்த இடத்தில், எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் கார்மேல்ராஜ் நல்லடக்கம் செய்யும் போது சூராணத்தில் வைத்து 01.01.2015 ம் தேதியன்று விசாரித்தார்கள். விபத்து சம்பந்தமாக யார் எனக்கு தகவல் சொன்னது என்றால் எனது உறவினர் யாரோ தான் தகவல் சொன்னார்கள் யார் என்று தற்போது ஞாபகமில்லை. எந்த வாகனம் மோதியது என்று என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 24.04.2023
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.